# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 14–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**I.A. No. 16 of 2025 in O.S. No. 351 of 2002**
**(CNR No. TNSA13-000032-2002)**

1. ஆறுமுகம்
2. மணி
3. பெரியசாமி .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. மருதை
2. முத்தம்மாள் (இறந்தவர்)
3. கங்கைய பண்டாரம்
4. மாவட்ட ஆட்சியர், சேலம்
5. வட்டாட்சியர், தலைவாசல்
6. வருவாய் ஆய்வாளர், தலைவாசல் பிர்கா
7. கிராம நிர்வாக அலுவலர், பட்டுதுறை
8. A. மாது
9. சுந்தரி .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

*.. 2 ...*

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 12.11.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.N. நடேஷ் அவர்களும், 2–ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 1, 3, 9 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்களும் ஆஜராகியும், 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

வா.சா.5–ஆன தலைவாசல் வட்டாட்சியர் அவர்களை மீண்டும் அழைத்து வாதிகள் தரப்பில் விசாரணை செய்ய அனுமதிவேண்டி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் தலைவாசல் வட்டாட்சியரை வாதிகள் தரப்பில் வா.சா.5–ஆக விசாரணை செய்ய அனுமதி வேண்டி இ.ம.வ.எண்.8/2023 மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும், மேற்படி மனுவில் கோரியுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்கவும், தாவா சொத்துக்களை களப்பணி செய்து, அதனடிப்படையில் சாட்சியமளிக்க தலைவாசல் வட்டாட்சியருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி உத்தரவின் அடிப்படையில் தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புகள், அதில்

.. 3 ...

பயிரிடப்பட்டுள்ள பயிர்கள், மரங்கள், மின் இணைப்பு, ஆஸ்பெஸ்டாஸ் அட்டை வேய்ந்த வீடு முதலானவைகளை களப்பணி செய்து கடந்த 02.07.2025 மற்றும் 05.08.2025 ஆகிய தேதிகளில் தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் வா.சா.5–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், மேற்படி இ.ம.வ.எண்.8/2023–ல் மனுதாரர்கள் தரப்பில் கோரியிருந்த ஆவணங்கள் தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லையென்றும், அவைகளை தேடி கண்டுபிடிக்க கால அவகாசம் வேண்டுமென்று பல வாய்தாக்கள் அரசு தரப்பில் வாங்கப்பட்டதாகவும், இந்நிலையில் கடந்த 10.10.2025 அன்று தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் முதல் விசாரணை செய்யப்பட்டார் என்றும், மனுதாரர்கள் தரப்பில் கோரியிருந்த ஆவணங்கள் இல்லை என்று எழுத்துமூலமாக கொடுத்த சான்று Ex.X7–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் கடந்த 10.10.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.5–ஐ அவரால் முதல் விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், பின்னிட்டு வா.சா.5 விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டதாகவும், மேற்படி சங்கதி குறித்து வழக்கு வாதிகள் தரப்பு விவாதத்திற்காக பரிசீலனை செய்தபோதுதான் தெரியவந்தது என்றும், வா.சா.5–ஆன தலைவாசல் வட்டாட்சியர் அவர்களிடம் தாவா சொத்துக்களை களப்பணி செய்தது பற்றியும், அதன் இயற்கை அமைப்பு குறித்தும் விசாரணை செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர்.

3. <u>**9–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**</u> மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த

.. 4 ...

எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மறுத்துள்ளனர். மேலும், தாவா சொத்து என்பது ஓடை தரிசு நிலம் என்றும், நீர்நிலை புறம்போக்குகள் குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் உரிமை தடை செய்யப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தான ஓடை புறம்போக்கு நிலத்தை வாதிகள் உரிமை கொண்டாடுவதற்காகவோ, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தடையுத்தரவு பரிகாரம் கோரவோ வாதிகளுக்கு உரிமையோ, முகாந்திரமோ இல்லை என்றும், தலைவாசல் வட்டாட்சியர் ஏற்கனவே அளித்த சாட்சியத்தின்படி தாவா சொத்து ஓடை தரிசு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களை ஒப்படைத்து சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கொண்டு மீண்டும் களப்பணி குறித்து விசாரிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு முகாந்திரம் இல்லை என்றும், இந்நிலையில் 2002–ம் ஆண்டு மனுதாரர்கள் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு ஆவணங்கள் ஒப்படைத்து வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டுமே தவிர, தற்பொழுது 2025–ல் மனுதாரர்களின் உரிமை மற்றும் சுவாதீனத்திற்குண்டான ஆவணங்களை தலைவாசல் வட்டாட்சியர் தாவா சொத்தை களப்பணி செய்து சாட்சியமளித்தாலும் அது எந்த வகையிலும் வழக்கின் எழுவினாக்களை தீர்மானிக்க பயன்படாது என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

.. 5 ...

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவில், அசல் வழக்கில் தலைவாசல் வட்டாட்சியரை வாதிகள் தரப்பில் வா.சா.5–ஆக விசாரணை செய்ய அனுமதி வேண்டி இ.ம.வ.எண்.8/2023–ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில் கோரியுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்கவும், தாவா சொத்துக்களை களப்பணி செய்தும், அதனடிப்படையில் சாட்சியமளிக்க தலைவாசல் வட்டாட்சியருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் கடந்த 10.10.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.5–ஐ அவரால் முதல் விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், வா.சா.5–ஆன தலைவாசல் வட்டாட்சியர் அவர்களிடம் தாவா சொத்துக்களை களப்பணி செய்தது பற்றியும், அதன் இயற்கை அமைப்பு குறித்தும் விசாரணை செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில், தாவா சொத்து என்பது ஓடை தரிசு நிலம் என்றும், நீர்நிலை புறம்போக்குகள் குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் உரிமை தடை செய்யப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தான ஓடை புறம்போக்கு நிலத்தை வாதிகள் உரிமை கொண்டாடுவதற்காகவோ, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தடையுத்தரவு பரிகாரம் கோரவோ வாதிகளுக்கு உரிமையோ, முகாந்திரமோ இல்லை என்றும், தலைவாசல் வட்டாட்சியர் ஏற்கனவே அளித்த சாட்சியத்தின்படி தாவா சொத்து ஓடை தரிசு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களை ஒப்படைத்து சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கொண்டு மீண்டும் களப்பணி குறித்து விசாரிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு

.. 6 ...

முகாந்திரம் இல்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கை வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், அசல் வழக்கில் தலைவாசல் வட்டாட்சியரை வாதிகள் தரப்பில் வா.சா.5–ஆக விசாரணை செய்ய அனுமதி வேண்டி இ.ம.வ.எண்.8/2023–ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனுவில் கோரியுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்கவும், தாவா சொத்துக்களை களப்பணி செய்தும், அதனடிப்படையில் சாட்சியமளிக்க தலைவாசல் வட்டாட்சியருக்கு இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி உத்தரவின் அடிப்படையில் தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புகள், அதில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள், மரங்கள், மின் இணைப்பு, ஆஸ்பெஸ்டாஸ் அட்டை வேய்ந்த வீடு முதலானவைகளை களப்பணி செய்து கடந்த 02.07.2025 மற்றும் 05.08.2025 ஆகிய தேதிகளில் தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் வா.சா.5–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டதாகவும், மேற்படி இ.ம.வ.எண்.8/2023–ல் மனுதாரர்கள் தரப்பில் கோரியிருந்த ஆவணங்கள் தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லையென்றும், அவைகளை தேடி கண்டுபிடிக்க கால அவகாசம் வேண்டுமென்று பல வாய்தாக்கள் அரசு தரப்பில் வாங்கப்பட்டதாகவும், இந்நிலையில் கடந்த 10.10.2025 அன்று தலைவாசல் வட்டாட்சியர் அவர்கள் முதல் விசாரணை செய்யப்பட்டார் என்றும், மனுதாரர்கள் தரப்பில் கோரியிருந்த ஆவணங்கள் இல்லை என்று எழுத்துமூலமாக கொடுத்த சான்று Ex.X7–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது

.. 7 ...

என்றும், மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் கடந்த 10.10.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.5–ஐ அவரால் முதல் விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், பின்னிட்டு வா.சா.5 விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டதாகவும், மேற்படி சங்கதி குறித்து வழக்கு வாதிகள் தரப்பு விவாதத்திற்காக பரிசீலனை செய்தபோதுதான் தெரியவந்தது என்றும், எனவே வா.சா.5–ஆன தலைவாசல் வட்டாட்சியர் அவர்களிடம் தாவா சொத்துக்களை களப்பணி செய்தது பற்றியும், அதன் இயற்கை அமைப்பு குறித்தும் விசாரணை செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர். எனவே வா.சா.5–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பது அவசியம் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை இந்நீதிமன்றம் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

3) மனுதாரர்கள் / வாதிகள் செலவுத்தொகையாக ரூ.1,000/–ஐ எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு 19.11.2025–ற்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

7. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு

*.. 8 ...*

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 14–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.14 18:11:01 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.14 18:11:10 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

முு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.

இ.ம.வ. எண் 16/2025

---------------

அ.வ. எண்.351/2002

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 14.11.2025

**இ.ம.வ. எண் 16/2025 in அ.வ.எண்.351/2002**